# எரேமியா

**அறிமுகம்.**

புத்தகத்தின் தலையங்கத்தின் பிரகாரம், எரேமியா ஆனதோத் நகரத்தில் ஆசாரியனாக இருந் தார், இவருடைய தீர்க்கதரிசன ஊழியம் யோசியாவின் பதின்மூன்றாவது ஆட்சிக் காலத்தில் (627-626 கி.மு) இடம்பெற்றது அத்துடன் இறுதியான யூதர்களின் கடைசி நாடுகடத்தல் 586இல் இடம்பெறும்வரை தொடர்ந்தது. அதிகாரங்கள் 39–44 குறிப்பிடுவதாவது, எரேமியா எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின்பும் தொடர்ந்து ஊழியம் செய்து கொண்டிருந்தார், அத்துடன் எகிப்திற்கு நாடுகடத்தப்படும் ஒரு குழுவினருடன் இணைந்து செல்லுமாறும் வற்புறுத்தப்பட்டார்.

**சரித்திரப்பின்னணி.**

யூதாதேசத்தின் இறுதி நாட்களில் எரேமியா ஊழியம் செய்தார். யோசியா அரசனின் உயிர்மீட்சியின் கீழ் (அவருடைய ஆட்சி 640-609 கி.மு)மற்றும் அசீரியர்களின் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியின் போதும், (612-609) யூதர்களுக்கு நம்பிக்கை காண்பிக்கப்பட்டது. தேசத்தினின் குழப்பத்தின் ஆவி, எப்படியோ பாபிலோனியர்களின் புதிய வல்லமையுடன் இணைந்து கொண்டது. அத்துடன் இதனுடைய குழப்பம் தவிர்க்கமுடியாததாக இருந்தது. அவர்கள் அசீரியாவின் தலைநகரமாகிய நினிவேயை கி.மு.612 இல் வெற்றி கொண்டார்கள். அவர் கடை சியாக அசீரியர்களில் மிகுதியாக இருந்த வல்லமையையும் காரான் நகரத்தில் வைத்து 609இல் வெற்றி கொண்டார்கள். இந்த காலத்தில் எகிப்தியர்கள் அசீரியர்களுடன் இணைந்து பாபி லோனியர்களை எதிர்த்து தங்கள் தேசத்தைக் காப்பாற்ற முனைந்தார்கள். கி.மு. 609இல், அவர்கள் அசீரியர்களுக்கு உதவுவதற்கு வடபக்கமாகச் சென்று கொண்டிருக்கும் போது, யோசியா அவர்களை வழிமறித்து யுத்தம் செய்து தன்னுயிரையும் விட்டார். யூதாவின் ஆட்சியை அவரது மகனாகிய யோவாகாஸ் எடுத்துக் கொண்டார், ஆனால், எகிப்தியர்கள் அவரைப்பிடித்துச் சென்றார்கள், மூன்று மாதங்களுக்குப்பின்பு, அவரது சகோதரனாகிய யோயாக்கீமுக்கு அந்த இடத்தைக் கொடுத்தார்கள். 605இல் பாபிலோனியர்கள் காக்கேமிஸில் யுத்தம்செய்து எகிப்தைத் தோற்கடித்து, மத்திய கிழக்குப்பகுதியில் வல்லமையான அரசாக தங்களை அபிவிருத்தி செய்தார்கள். யோயாக்கீம், பாபிலோனியர்களுக்கு உண்மையாக இருந்த போதிலும், அவர்களுக்கு எதிராக புரட்சி செய்தான். பாபிலோனியர்கள் எருசலேமை முற்றுகையிட்டு 597இல் நகரத்தை வெற்றி கொண்டார்கள். அவர்கள் யோயாகீமுக்குப்பதிலாக அவரது மகனாகிய யோயாக்கீன் அரசனாக்கினார்கள், அவர் மூன்றுமாதங்கள் மட்டும்

தன்னுடைய தகப்பன் இறந்தபிற்பாடு அவருடைய மாமனாராகிய செதேக்கியாவுடன் இணைந்து ஆட்சி செய்தார். சில காலம் பாபிலோனியர்களுக்கு உண்மையாக இருந்த பிற்பாடு செதேக்கியாவும் புரட்சி செய்தார். கி.மு.588இல் நேபுகாத்நேச்சார் யூதாவை முற்றுகையிட்டான், எருசலேமை பெரும் முற்றுகைக்குள் படுத்தினான், அதனால் நகரம் 586இல் வீழ்ச்சியடைந்தது. பாபிலோனியர்கள் அனேகமானோரை நாடுகடத்தினார்கள், ஆனால் சிறிய தொகையினரைத் தொடர்ந்தும் அங்கு கெதலியாவை ஆளுநராக பாபிலோனியர்கள் நியமித்து அவரின் அதிகாரத்தின் கீழ் இருப்பதற்கு அனுமதித்தார். 586இல்கெதலியா ஒரு அதிருப்பியாளர் குழுவினரால் கொலை செய்யப்பட்டார். பாபிலோனியர்களின் பழிவாங்குதலுக்குப் பயந்து பெரும்பாலனவர்கள் எகிப்திற்கு ஓடினார்கள். இதற்கு எதிராக எரேமியா குரல் கொடுத்தார், பாபிலோனியர்கள் தண்டிக்கமாட்டார்கள் என்று பலதடவை கூறினார், ஆனால் அவரும் தப்பியோடும்படி வற்புறுத்தப்பட்டார்.

**கருப் பொருள் அல்லது மையக் கருத்து.**

இந்த புத்தகம் விடுதலைக்கான பல வழிகளைக் கூறியுள்ளது, அவையாவன, தீர்க்கதரிசன செய்திகள், அவைகள் பாடல்வடிவிலும், வசனநடையிலும், மற்றும் எரேமியாவின் ஊழியத்தின் சுயசரிதைவடிவிலும் காணப்படுகின்றன. முதல் அரைவாசிப்புத்தகத்தில் எரேமியாவுக்கும் கர்த்தருக்கும் இடையில் ஏற்பட்ட உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவற்றில் தீர்க்க தரிசி ஜெபத்தில் தன்னுடைய இருதயத்தை ஊற்றியிருப்பதைக் காணலாம். உருவகமான செயற்பாட்டுச் செயற்பாடுகளின் பதிவுகளையும் அங்கு காணலாம். அதிகாரங்கள் 1–24 யூதா வின் பாவங்களை காண்பித்து அவற்றிற்கான வரவிருக்கும் நியாயத்தீர்ப்புக்களையும் கூறு கின்றன. புத்தகத்தின் நோக்கம் 25–52 அதிகாரங்களில் பெரிதாக கூறப்பட்டுள்ளன, அங்கு கர்த்தர் தேசத்திற்கு எதிராக்கூறிய நியாயத்தீர்பின் செய்திகளும், அத்துடன் யூதா தேசத்தின் முழுமையான மீள்நிலைப்படுத்தலும் காணப்படுகின்றன. எபிரேய, பழைய கிரேக்க வேதாக மங்களின் ஒப்பீடுகள் புதிய பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சுற்றறிக்கைமூலம் வெளியிடப்பட்டது.

**I. எரேமியாவின் ஊழியம் இடம்பெற்றபோது ஆட்சிசெய்தவர்கள்**

A. யோசியா. (Josiah) . யூதாவின் சிறந்த ஆட்சியாளரான யோசியாவின் நாட்களில் எரேமியா கர்த்தரால் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார்.

B. யோயாக்கிம். (Jehoiakim). இந்த துஷ்ட அரசன் எரேமியாவினான் எழுதப்பட்ட தீர்க்கதரிசன சுருள்களை எரித்துச் சாம்பலாக்கினான்.

C. யோயாக்சின். ( Jehoiachin ) தொண்ணுறு நாள் அற்புதம் எரேமியாவால் கண்டனம் செய்யப்பட்டது.

D. செதேக்கியா (Zedekiah). யூதாவின் கடைசி அரசனாகிய செதேக்கியாவின் காலத்தில் தீர்க்கதரிசி அதிகமாக துயரப்பட்டார்.

E. நேபுகாத்நேச்சார்.( Nebuchadnezzar). மகாபாபிலோனை வெற்றி கொண்டவர் இவரால் எரேமியா அதிகம் மதிக்கப்பட்டார்.

F. கெதலியா (Gedaliah)தோல்வி கண்ட எருசலேமை ஆட்சி செய்யும்படி நேபுகாத்நேச்சரால் நியமிக்கப்பட்டார்.
G. யோகன்னான் (Johanan) . கெதலியாவைக் கொலைசெய்யப்பட்ட பின் அவருடைய பதவியைக் கைப்பற்றிக் கொண்டார், பிற்பாடு மிகுதியாக இருக்கும் யூதர்களுடன் எரேமியாவை எகிப்திற்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினான்.

**II. எரேமியாவின் மூன்றுவகையான ஊழியங்கள்**.
A. பாபிலோனிய சிறையிருப்பு பற்றி யூதாவில் அனேக ஜனங்கள் மத்தியில் எரேமியா எச்சரிக்கைவிடுத்தார்.
B. பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த சிறிய தொகையினரை ஏற்கனவே எரேமியா ஆறுதற்படித்தியுள்ளார். (அதி 29). பாபிலோனில் இருந்த யூத சிறையிருப்பாளரை உற்சாகப்படுத்தும் கடிதத்தை எரேமியா எழுதியிருந்தார். (29:1-32).

C. அவர் ஒன்பது புற ஜாதித் தேசத்தார்மீது நியாயத்தீர்ப்பைக் கூறினார் (46-51).

1. எழுபது வருட நீண்டகாலத்திற்குப்பின்பாக அவர்கள் மீண்டும் குடியமர அனுமதிக்கப்படுவார்கள்.

2. அவர்கள் பாபிலோனின் சமாதானத்திற்காகவும், செழிப்பிற்காகவும் ஜெபம் செய்தார்கள் ஏனெனில் தங்கள் வாழ்க்கை சமாதானமாக இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

3. பாபிலோனிலிருந்த சூனியக்காரரையும் கள்ளத்தீர்க்கதரிசிகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தார்கள்.

4. எரேமியா இவ்வாறான பொய்த்தீர்கதரிசிகள் மீது மரணத்தைக் குறித்துப் பேசினார், அவர்களுடைய பெயர்கள் ஆகாப், செதேக்கியா என்பதாகும். இவர்கள் பொய்யான செய்திகளையும் கூறினார்கள், அவர்களுடைய வாழ்வும் பாவவாழ்க்கையாக இருந்தது. (29:20-23).

5. **செமாயா** என்ற மனிதனைக்குறித்து அவர் சிறையிருப்பாளர்களை எச்சரித்தார், அவர் பாபிலோனியத் தலைவர்களுக்கு தவறான எண்ணக்கருக்கள் அடங்கிய கடிதத்தை எருசலேமிலுள்ள பாபிலோனியத் தலைவர்களுக்கு எழுதியுள்ளார் என்பதைச் சுட்டிக்காண்பித்தார் (29:23-32).

6. கர்த்தர் இன்னமும் அவர்களை நேசிக்கின்றார், ஒருநாள் அவர் அவர்களை மீண்டும் எருசலேமிற்குக் கூட்டிவருவார். (29:14).

C. **அவர் ஒன்பது புற ஜாதித் தேசத்தார்மீது நியாயத்தீர்ப்பைக் கூறினார்.** (46-51). அந்த தேசங்களாவன எகிப்து (46:1-27) பெலஸ்தியா (47:1-6) மோவாப் (48:1-47) அம்மோன் (49:1-6) ஏதோம் (49:7-22) தமஸ்கு (49:23-27) கேதார், கேசொர் (49:28-33) ஈலாம் (49:34-39) பாபிலோன் (50-51) இந்தத் தேசங்களைக் கவனித்தபிற்பாடு எரேமியா ஒவ்வொரு நாட்டிடனும் விஷேசித்தமுறையில் தொடர்பு கொண்டார் என்பதைக் கவனிப்போமாக

**1. எகிப்து (46:1-27).**

a. எகிப்து நேபுகாத்நேச்சாரினால் கர்கேமிசில் ஏற்பட்ட யுத்தத்தில் தோற்கடிக்கப்படும். (46:2).

b. அவர்களுடைய இராணுவம் பயந்து ஓடுவார்கள், ஐபிராத்து நதியண்டையிலே அவர்கள் பிணங்கள் நிரப்பப்படும். (46:5, 6).

c. அவர்கள் பாவத்தின் காயங்கள் மாற்றமுடியாதவையாக இருக்கும். (46:11).

d. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான்; அவனுக்குக் குறித்த காலம் முடிந்ததென்று அங்கே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். (46:17).

e. எகிப்து நேபுகாத்நேச்சாரினால் கைப்பற்றப்படும். (46:26).

**2. பெலிஸ்தியா (47:1-6).**

a. இது எகிப்தியர்களால் மிதிக்கப்படும். யோசியா மரித்தவருடத்தில் கி. மு. 606இல் இது நிறைவேறியது. (47:1).

b. பலத்த பெலிஸ்தியர்களின் மனிதர்கள் கூக்குரலிடுவார்கள்,பெற்றோர் உதவியற்ற பிள்ளைகளைவிட்டுவிட்டு ஓடிப்போவார்கள். (47:2, 3).

c. அதேநேரம் பெலிஸ்தியாவின் நேச நாடுகளான தீருவும் சீதோனும் அழிக்கப்படும். (47:4).

d. பெலிஸ்தியாவின் முக்கிய நகரங்களான காசாவும் அஸகலோனும் முற்றாக அழிக்கப்படும். (47:5).

**3. மோவாப் (48:1-47).**

a. நேபுகாத்நேச்சாரின் இராணுவம் மோவாப்பை மிதித்துப் போடும். (48:1, 2).

b. அவர்களுடைய தெய்வமாகிய கேமோஷ் சிறையாக்கப்பட்டுப்போம்; அதின் ஆசாரியரும் பிரபுக்களும் ஏகமாய்ச் சிறைப்பட்டுப்போவார்கள். (48:7).

c. இந்த நாட்களுக்கு முன்பாக, மோவாப் பல முற்றுகைகளுனால் கதிகலங்காமல் இருந்தது.(48:11).

d. இதன்முடிவில் மோவாப்பின் தேசிய தெய்வமாகிய கேமோஷாலே வெட்கப்பட்டது, பெத்தேலில் இஸ்ரவேல் கன்றுக்குட்டியால் வெட்கப்பட்டதுபோல. (48:13).

e. மோவாப்பினுடைய மூதாதையர்கள் (மோவாப்) ஒருகெபியிலே பிறந்தார். (ஆதி. 19:37). பாபிலோனியர்களின் முற்றுகையின்போது, மோவாப்பியர்கள் மீண்டும் கெபிகளுக்கு ஓடுவார்கள். (48:28).

**4. அம்மோன். (49:1-6).**

a. இந்த தேசம் இஸ்ரவேல் தேசத்தைப்பிடித்து அதில் குடியிருந்து பொய்த் தெய்வமாகிய மில்கொம் தெய்வத்தை வணங்குகிறபடியால் தண்டிக்கப்படும். (49:1).

b. அவர்களுடைய மில்கொம் ஆசாரியராலும், அரசனாலும் கொண்டு செல்லப்படும். (49:3).

c. ஆயிரம்வருட அரசாட்சியில் அம்மோன் மீண்டும் விருத்தியடையும். (49:6).

**5. ஏதோம் (49:7-22).**

a. ஏதோமுடைய நகரங்கள் அமைதியாக சோதோம் கொமோராவாக மாறும்.(49:18).

b. அவர்களுடைய கூக்குரல் செங்கடல் வரை கேட்கும் (49:21).

c. அவர்களுடைய விதவைகளுக்கும், ஆதரவற்றோருக்கும் கர்த்தர் இரக்கம் காண்பிப்பார். (49:11).

**6. தமஸ்கு (49:23-27).**

a. ஒரே நாளில் தமஸ்குவின் முழு இராணுவமும் அழிக்கப்படும். (49:26).

b. தமஸ்குவின் மதில்களில் தீக்கொளுத்துவேன்; அது பெனாதாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும் என்கிறார். (49:27).

**7.** கேதார் காத்சோர் (49:28-34).

a. கேதார் என்பது அராபிய கோத்திரத்தின் பெராகும் இவர்கள் பாலஸ்தீனத்தின் கிழக்குப்பக்கத்தில் இருந்தார்கள், இவர்கள் நேபுகாத்நேச்சரால் அழிக்கப்பட்டார்கள். (49:25).

b. கர்த்தர் தாமே இந்த கோத்திரத்தை அழிக்கும்படி கட்டளையிட்டார். (49:31).

c. காத்சேர், இன்னுமொரு அராபிய கோத்திரமாகும், அவர்களும் இவர்களுடன் இணைந்து அழிக்கப்பட்டார்கள். (49:33).

**8. ஏலாம் (49:34-39).**

a. ஏலாம் தைகிறிஸ்- ஐபிராத்துவிற்கு கிழக்குப்பக்கமாக இருக்கும் நாடாகும், இது நேபுகாத்நேச்சாரினால் கி.மு. 596 இல் முறியடிக்கப்பட்டது, செதேக்கியா, யூதாவின் கடைசி அரசன் எருசலேமில் அந்தநேரம் ஆட்சி செய்தார். (49:34).

b. ஆயிரம் வருட அரசாட்சியில் ஏலாம் மீண்டும் செழிப்படையப்பண்ணப்படும். (49:39).

**9. பாபிலோன் (50:1–51:64).**

a. இந்த வார்த்தைகளில் இரண்டு பாபிலோன்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒன்று சரித்திர சம்பந்தமான பாபிலோன், அது பெர்சியனாகிய தரியுவால் 539இல் கைப்பற்றப்பட்டது. (தானி 5) மற்றது எதிர்கால பாபிலோன், அதனை கர்த்தர்தாமே அழிப்பார். (வெளி. 18:18.)

b. இரண்டுபாபிலோன்களும் அழிக்கப்பட்டபிற்பாடு , இஸ்ரவேல் தன்னுடைய கர்த்தரைத் தேடுவார்கள். இது சரித்திரமாக இடம்பெற்றது. (எஸ்றா1) அத்துடன் எதிர்காலத்திலும் இது இடம்பெறும். (சகரியா 13:9-14:11).

c. பாபிலோன் அழிக்கப்பட்டபிற்பாடு (வெளி. 18) நகரம் ஒருபோதும் மீண்டும் குடியமர்த்தப்படமாட்டாது. (51:26).

d. கர்த்தர் இல்லாத ஜனங்கள் யாவும் இரண்டு பாபிலோன்களின் அழிவிலே வாரிக் கொள்ளப்படுவார்கள். (வெளி. 18; எரே. 50:46).

e. இஸ்ரவேலர்கள் இரண்டு பாபிலோன்களிலுமிருந்து தப்பி ஓடுவார்கள். (வெளி. 18:4; எரே. 51:6).

f. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப் போனார்கள். (வெளி. 17:1-6; எரே. 51:7).

g. இரண்டும் அழிக்கப்பட்டதனால் பரலோகம் சந்தோஷப்பட்டது. (எரே. 51:10, 48; வெளி. 18:20).

**III. எரேமியாவின் தனிப்பட்ட சரித்திரம்.**

A. இவர் யோசியாவின் காலத்தில் முழுநேர ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார். (1:1-10). இவர் திருமணம்முடியாமல் இருந்தார். (16:2).

1. பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியாவாகும். (1:1).

2. யோசியா அரசனின் 13ம் வருடத்தில் எரேமியா முழுநேர ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார். (1:2

a. ஆரம்பத்தில் இந்த அழைப்பை எரேமியா எதிர்த்தார். (மோசே செய்தது போல் யாத் 3-4) தான் வாலிபனாக இருப்பதால் இதனை தவிர்க்க முயற்சித்தார். (1:6).

b. கர்த்தர் அவரை மீண்டும் வலியுறுத்தி அழைத்தார்.

(1) எரேமியா தாயின் வயிற்றில் இருக்கும்போதே கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டார். (1:5).

(2) அழைக்கப்பட்ட தன்னுடைய தூதனுக்கூடாக செய்திகளை கர்த்தர் தன்னுடைய செய்திகளை எரேமியாவுக்கு கொடுத்தார். (1:7-10).

3 வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து பயப்படாமல் அவர் பிரசங்கித்தபடியால், எரேமியா சொந்தக் குடும்பத்தாலே குற்றம் சுமர்த்தப்பட்டார், (12:6), நகரத்துமக்களாலும் குற்றம் சுமர்த்தப்பட்டார் (11:21) அதுமட்டுமல்லாமல் முழு யூதாதேசத்தாராலும் குற்றம் சுமர்த்தப்பட்டார்.

4. அவர் ஊழியத்தைத் தொடரும் போது, கர்த்தர் அவருக்கு இரண்டு விடயங்களைக் காண்பித்தார், அது இயற்கைகுறித்தும், அவருடைய அழைப்பைக் குறித்துமாக இருந்தது.

a. கர்த்தர் வாதுமை மரத்தின் கிளையை எரேமியாவிற்குக் காண்பித்தார். (1:11) ஏனெனில் இது மற்றய மரங்களைவிட முதலில் பூக்கத் தொடங்கும், வாதுமை மரமானது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கான அடையாளமாகும்.

b. அவர் பொங்குகிற பானையைக் காண்டார், அது வடக்கே நோக்குகிறாக இருந்தது, இது பாபிலோனியர்களின் முற்றுகையைக் குறிக்கின்றது. (1:13).

5. யூதாவுக்கு வரப்போகும் அழிவைக்குறித்து எரேமியா புலம்பினார். (4:19-21). இவர் இவ்வாறு அடிக்கடி புலம்புவார். (8:18, 21; 9:1, 2, 10; 13:17; 14:17).

6. எரேமியாவுக்கு கர்த்தர் கட்டளையிட்டதாவது, "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டுபிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன். " (5:1). சோதோம் கொமாரா பற்றியும் இவ்வாறாகவே கர்த்தர் ஆபிரகாமுக்கு கூறினார். (ஆதி. 18:23-33).

7. எரேமியா இவர்கள் நீசராமே, இவர்கள் மதியற்றவர்கள்; கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள் என்றுகூறினார். நான் பெரியோர்களிடத்திலே போய், அவர்களோடே பேசுவேன்; அவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறிவார்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ ஏகமாய் நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்துப்போட்டார்கள். (5:4, 5).

8. முப்பத்தொரு வருட நல்லாட்சிக்குப்பின்பு யோசியா மரித்தார். இவருடைய மரணச்சடங்கை புலம்பல் தீர்க்கதரிசி நடத்தினார். (2கொரி. 35:25). யூதாவின் நல்ல அரசன் மரித்தபின்பு, அது மெதுவாக தன்னுடைய ஆவிக்குரிய நிலமையை இழந்துவந்தது

**B. யூதா மீண்டும் கர்த்தர்பக்கமாகத் திரும்பவேண்டும் என்று அவர் கர்த்தரிடம் பிராத்தனை செய்தார். (3:12-14; 26:1-7).**

1. இஸ்ரவேலைத் தன்பக்கமாகத் திரும்பும்படி கர்த்தர் மீண்டும், மீண்டும் அழைத்துக் கொண்டேயிருந்தார். (2:9).

2. நீயோவென்றால் அநேக நேசரோடே வேசித்தனம்பண்ணினாய்; ஆகிலும் என்னிடத்திற்குத் திரும்பிவா என்று கர்த்தர் சொல்லுகிறார். (3:1). இது மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தடைசெய்யப்பட்டிருந்தது. (உபாகமம். 24:1-4).

3. யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள். (4:3, 4).

4. எருசலேமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு; எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும். (4:14). மனந்திரும்பி மன்னிப்பு கேட்டால் விடுதலை.

5. உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள், அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன். (7:3).

6. அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள். (13:16). பாடுகள், துன்பங்கள் வரமுன் கர்த்தரை தேடவேண்டும்.

**C. பாபிலோனியர்களுக்கு ஏற்படப்போகும் நியாயத்தீர்ப்பை பயமின்றி துணிகரமாக அறிவித்தார். அதன்பின்பு யூதாவின் பாவங்களையும் பட்டியலிட்டார்.**

1. என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள். (2:13). உலகப் பொருளை நாடிப் போனார்கள்.

2. ஜனங்கள் துஷ்டஜனங்களாக மாறிப் போனார்கள். (2:21).

3. நீ உன்னை உவர்மண்ணினாலே கழுவி, அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும், உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (2:22).

4. உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது;(2:34).

5. அவர்கள் வெட்கம் இல்லாத வேசிகளைப்போல் இருக்கிறார்கள். (3:3).

6. அவள் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் போய், அங்கே பெய்த் தேவர்களை வணங்குகிறார்கள். (3:6). சிலை வணக்கத்தை தேவன் வெறுக்கிறார்.

7. அழிக்கிற சிங்கத்தைப்போல உங்கள் பட்டயம் உங்கள் தீர்க்கதரிசிகளைப் பட்சித்தது. (2:30).

8. அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித்திரிகிறவர்களுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்; அவர்களெல்லாரும்

கெட்டவர்கள்.  அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித்திரிகிறவர்களுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்; அவர்களெல்லாரும் கெட்டவர்கள். (6:28).

9. எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள், வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள் (7:18; 44:17). வானத்தின் இராணி (வானராக்கினி). இஸ்தர் என்ற பெயருடைய மெசப்பொத்தாமியாவின் பெண் தெய்வத்தை வானராக்கினி என வணங்கி வந்தனர்.

10. தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனபலியாக்கொடுக்கிறார்கள்.   (7:31; 19:5). மோளேகு என்கிற தெய்வத்திற்கு யூதர்கள் பலிசெலுத்தி வந்தார்கள்.

**D. கீழ்ப்படியாமையின் மோசமான பாதிப்பின் நிமித்தம் அவர் அவர்களை இறுதியாக கடுமையாக எச்சரித்தார்**.

1. பெருந்திரளான இராணுவம் எருசலேம்மீது வரும்.

2. பாபிலோனுக்கு எதிராக யூதாவுக்கு உதவியாக அசீரியா அல்லது எகிப்து உதவியும் செய்யாது.  (2:18, 36).

3. யூதாவின் நகரத்திலுள்ளவர்கள் சிங்கத்துக்கு பயந்து ஓடுகிறவர்கள் போல நாட்டைவிட்டு தப்பி ஓடுவார்கள். (4:5-7). நாட்டை விட்டு ஓடுவார்கள் என தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது.

4. காட்டு மிருகங்களை வேட்டையாட வளைந்து கொள்வது போல யூதாவை வேட்டையாடுவதற்கு வளைந்து கொள்வார்கள்.  (4:17; 6:3-5).

5. பிரசவ வேதனைப்படும் ஸ்திரிகளைப் போல அவர்கள் ஓலமிடுவார்கள்.  (4:31; 6:24; 13:21).

6. மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்; அதுவே விசாரிக்கப்படவேண்டிய நகரம்; அதின் உட்புறமெல்லாம் கொடுமை.
(6:6). எருசலேமை பிடிப்பதற்காக இவ்வாறு மேடையை உண்டாக்கி மதில் மேல் ஏறுவார்கள்.

7. ஆலயம் அழிக்கப்படும். (7:14). ஏலியின் காலம் வரை ஆசாரிப்புக் கூடாரம் இருந்த சீலோ என்கிற இடம் அழிக்கப்பட்டது.

8. எதிரிகளின் படைகள் விஷப்பாம்புகளைப் போல எருசலேமிற்குள் நுழைவார்கள். (8:17).

9. அனேகமானவர்கள் வாளினால் அழிக்கப்படுவார்கள்.  (15:3) நோயினால் அழிக்கப்படுவார்கள். (16:3, 4) பஞ்சத்தால் அழிக்கப்படுவார்கள். (21:9).

10. அனேகர் வனாந்தரக் காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப் போல சிதறடிக்கப்படுவார்கள். (13:24).

11. எருசலேமிற்கு வெளியே அனேகர் அடக்கம் செய்யப்படாத பிரேதங்களாக காணப்படும், அவைகள் காட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப்பறவைகளுக்கும் உணவாகும். (7:32, 33; 9:22; 12:8, 9).

12. அக்காலத்திலே யூதாவினுடைய ராஜாக்களின் எலும்புகளையும், அவர்களுடைய பிரபுக்களின் எலும்புகளையும், ஆசாரியர்களின் எலும்புகளையும், தீர்க்கதரிசிகளின் எலும்புகளையும், எருசலேமுடைய குடிகளின் எலும்புகளையும், அவர்களுடைய பிரேதக்குழிகளிலிருந்து எடுத்து, அவர்கள் நேசித்ததும், சேவித்ததும், பின்பற்றினதும், நாடினதும், பணிந்து கொண்டதுமாயிருந்த சூரியனுக்கும், சந்திரனுக்கும், வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாக அவைகளைப் பரப்பிவைப்பார்கள் (8:1, 2). எருசலேமை நேபுக்காத்நேச்சர் அழித்த போது இது நிறைவேறியது.

13. ஆயிரக்கணக்கானோர் எழுபதுவருட சிறையிருப்பிற்காக பாபிலோனுக்குள் கொண்டு செல்லப்படுவார்கள். (7:15; 25:11; 29:10).

14. யூதாவுக்கு கொடுக்கப்பட்ட அதிகளவிலான தண்டனையைப் பார்த்த பாகால் வணக்க புறஜாதித் தேசத்தார் திகைத்துப் போவார்கள். (19:8; 22:8; 25:11).

**E. ஜனங்கள் இந்தச் செய்திகளையெல்லாம்** கேலிசெய்து வெறுத்தபோது, எச்சரிக்கைசெய்த தீர்க்கதரிசி, புலம்பல் தீர்க்கதரிசியாக மாறினார். (4:19; 8:21; 9:1, 2, 10; 13:17; 14:17).

**F. எரேமியாவின் செய்திகளும் அவரது நிலையும் அவரை அதிகம் துக்கப்படுத்தியது.**

1. அவரது சொந்தக் குடும்பமே அவரைத் துக்கப்படுத்தியது. (12:6).

2. அவருக்கு எதிராக அவரது சொந்த ஜனங்களே புரட்சி செய்தார்கள். (11:21).

3. மதசார்பானவர்கள்மத்தியில் அவர் வெறுக்கப்பட்டுவையப்பட்டார்.

a. எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச் சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான். (20:1-3).

b. இந்த செய்திகளை எரேமியா பேசிமுடித்தபோது அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள். (26:7-9).

c. அன்னியா என்ற பொய்த்தீர்க்கதரிசியால் அவர்வையப்பட்டார். (28).

4. யோயாக்கீம் அரசனால் அவர் பயமுறுத்தப்பட்டார். (26:21-24; 36:26).

5. எரேமியா சிறைப்பிடிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார். (37:11-16). யூதாவின் மீது நேபுகாத்நேச்சார் யுத்த அறிப்பை விடுத்போது, செதேக்கியா , எரேமியாவிடம் ஆள் அனுப்பி இதற்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டான். (21:1, 2). துஸ்ட அரசனுக்கு எரேமியா

சொல்லியனுப்பினது, இந்த விடயத்தில் ஜெபம் பிரயோசனமற்றது, ஏனேனில் கர்த்தர் எருசலேமைத் தண்டிப்பதற்கு பாபிலோனியர்களைப் பயன்படுத்துகின்றார், செதேக்கியாவும் நேபுகாத்நேச்சாரிடம் ஒப்படைக்கப்படுவான் என்று கூறினார். (21:3-7). எரேமியா செதேக்கி யாவுக்கு கூறியதாவது, எருசலேம் கொளுத்தப்பட்டு நீயும் பிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்படுவாய் என்பதாகும். (34:1-5). யூத வீட்டுச் சொந்தக்காரராகிய செல்வந்தர்கள், எபிரேய அடிமைகளை ஏழாம் வருடமுடிவில் விடுதலையாக்காமல் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறினபடியால் எரேமியா அவர்களைக் கடிந்து கொண்டார். (34:8-16 யூதாவுக்கு உதவியாக பார்வோனுடைய எகிப்திய இராணுவங்கள் நேபுகாத்நேச்சாருடன் யுத்தம் புரிவதற்காக யூதாவுக்குள்வந்தன, எரேமியா, செதேக்கியாவை எச்சரித்து நேசநாடுகளின் உதவி தோல்வியில் முடியும் என்று கூறி, நேபுகாத்நேச்சார் எகிப்தை தோற்கடிப்பார் என்று கூறினார். (37:5-10). இந்த நேரத்தில் எரேமியா பென்ஜமின் தேசத்திற்குள் தான் வாங்கி வைத்த சொத்துக்களைப் பார்ப்பதற்குப் போவதற்கு எத்தனித்தார், (37:11, 12). அவன் பென்யமீன் வாசலில் வந்தபோது, காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்னும் நாமமுள்ள ஒருவன் அங்கே இருந்தான்; அவன் அனனியாவின் குமாரனாகிய செலேமியாவின் மகன்; அவன்: நீ கல்தேயரைச் சேரப்போகிறவன் என்று சொல்லி, எரேமியா தீர்க்கதரிசியைப் பிடித்தான். (37:13). எரேமியா இந்தக் குற்றச் சாட்டுக்களை மறுத்தார், ஆனாலும் அவரைச் சிறையில் அடைத்தார்கள். (37:14-16). பின்பு சிதேக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி: கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று ராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க் கேட்டான். அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர் என்று சொன்னான். (37:17) அப்பொழுது எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலே காக்கவும், நகரத்திலே அப்பமிருக்குமட்டும் அப்பஞ்சுடுகிறவர்களின் வீதியிலே தினம் ஒரு அப்பத்தை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவும் கட்டளையிட்டான்; அப்படியே எரேமியா காவற்சாலையின் முற்றத்திலே இருந்தான். (37:21). அந்த மாளிகையில், எப்படியோ மதஅதிகாரிகளின் தூண்டுதல் எரேமியாவுக்கு எதிராக அதிகரித்து, அதனால் செதேக்கியா , எரேமியாவுக்கு அதிக தண்டனை கொடுக்க கட்டளையிட்டான், அதனால் அவர்கள் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான். (38:1-6). அப்பொழுது எதியோப்பிய நண்பனான எபெத்மெலேக் ராஜாவின் அரமனையிலிருந்து புறப்பட்டுப் போய், ராஜாவை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை என்றான். அப்பொழுது ராஜா எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனை நோக்கி: நீ இவ்விடத்திலிருந்து முப்பது மனுஷரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோய், எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்குமுன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான். (38:7-13). மீண்டும் எருசலேமின் வீழ்ச்சியை எரேமியா முன்னறிவித்து கொண்டேயிருந்தான். (38:14-17). (32:1-5). நகரம் பிடிபடும்வரை அவர் சிறையிலேயே இருந்தார். (38:28).

6. துஸ்ட அரசனாகிய யோயாக்கீம் தன்னுடைய சுருளை எரிப்பதை எரேமியா பார்த்தார். (36:21-23). யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு நீ ஒரு புஸ்தகச்சுருளை எடுத்து, யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக்குறித்தும், யூதாவைக்குறித்தும், சகல ஜாதிகளை

க்குறித்தும் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது என்று கட்டளை யிட்டார். (36:1, 2) ஆலயத்தில் இருந்த யாவருக்கும் இந்த வார்த்தைகளை பாறாக் வாசித்துக் காண்பித்தான். (36:8). பின்பு அவன் மதகுருமாருக்கு வாசித்துக் காண்பிப்பதற்காக அழைக் கப்பட்டான். வாசித்து முடித்தபோது, அவர்கள் மிகவும் பயந்தார்கள், அத்துடன் இதனை அரசன் யோகாக்கீமும் கேட்க வேண்டும் என்று விரும்பினார்கள். (36:14-16). அப்பொழுது ராஜா அந்தச் சுருளை எடுத்துக்கொண்டுவர யெகுதியை அனுப்பினான்; யெகுதி அதைச் சம்பிரதியாகிய எலிசா மாவின் அறையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து, ராஜா கேட்கவும், ராஜாவினிடத்தில் நின்ற எல்லாப் பிரபுக்களும் கேட்கவும் வாசித்தான். ஒன்பதாம் மாதத்திலே ராஜா, குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; அவனுக்கு முன்பாகக் கணப்பு மூட்டியிருந்தது. யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக் கத்தியினால் அதை அறுத்து, சுருளனை த்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்து போட்டான். (36:21-23). எரேமியா எரிக்கப்பட்ட சுருளுக்குப் பதிலாக புதிய சுருளை எழுதும்படி கட்டளையிட்டார், மேலும் அதற்குமேலதிகமாக ,யோகாக்கீமைக்குறித்து பயங்கரமான வார்த் தைகளையும் எழுதும்படி கூறினார், “யூதாவின் அரசனாகிய யோகாக்கீமுக்கு கர்த்தர் சொல் லுகிறதாவது, தாவீதின் சிங்காசனத்தில் அவனால் அமரமுடியாது, அவனது மரித்த உடல் பகலில், வெய்யிலில் காயும், இரவில் பனியில் நனையும். அவனுடைய சேவகர்களையும், பிள்ளைகளையும், அவனுடைய பாவத்திற்கு தண்டனையாக்குவேன், எருசலேமின் குடிமக்கள் மீதும் தண்டனையை வரப்பண்ணுவேன், யூதாவின் மனிதர்கள்மீதும் தண்டனையை வரப்பண்ணுவேன். பின்னும் எரேமியா இன்னுமொரு சுருளை எடுத்து பாரூக்கிடம் கொடுத்து, யோகாக்கீம் எரித்துப் போட்ட சுருளில் எழுதியாவற்றையும் வாயினால் கூறினான், அவற்றை அவன் எழுதினான், (45:1-5).

7. இப்போது எருசலேமிற்காக ஜெபம் செய்யவேண்டாம் என்று கர்த்தர் அவருக்குக் கட்டளையிட்டார். (7:16, 11:14; 14:11; 16:5).

8. நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று. (20:7-9, 14-18). யூதாவைத் திரும்பவும் கர்த்தர்பக்கம் கொண்டுவரமுடியாததையிட்டு எரேமியா துக்கமாக இருந்தார், அதனால் தன்னுடைய ஊழியத்தையே விட்டுவிடத் தீர்மானித்தார், “ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம்பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற்போயிற்று. ” (20:9). (1 இரா19:3, 4; யோனா 1:1-3; 1கொரி 9:16.) இந்த நேரத்தில் அவர் மிகவும் மனச் சோர்வுடன் ஜெபம் செய்தார். (யோபு3): “நான் பிறந்த நாள் சபிக்கப்படுவதாக; என் தாயார் என்னைப் பெற்ற நாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக. உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன். அந்த மனுஷன், கர்த்தர் மனம் மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப்போலிருந்து, காலமே அலறுதலையும் மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக்கடவன். என் தாயார் எனக்குப் பிரேதக்குழியும், நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாகக் கர்ப்பத்திலே நான் கொலை செய்யப்படாமற்போனதென்ன? நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு, என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?” (20:14-18).

9. பாபிலோனில் அவர் இருக்கும் போதே ஏற்கனவே யூத சிறையிருப்பாளர்களை உற்சாகப்படுத்தி கடிதம் எழுதியுள்ளார். (20).

10. சிறையில் இருக்கும் போது கனாமல் என்பவருடைய வயலை வாங்கும்படி கர்த்தர் எரேமியாவுக்கு கட்டளையிட்டார். இது பாபிலோன் இராணும் முன்னேறிவருதற்கான விளக்கமாகும். ஏனெனில் இனி இந்தத் தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றேன். ஏனெனில் இனி இந்தத் தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றேன். " (32:15). இதன்பின்புலம் மிகவும் ருசிகரமானதாகும். இதோ, உன் பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேல் உன்னிடத்தில் வந்து: ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்ளுகிறதற்கு உனக்கே மீட்கும் அதிகாரம் அடுத்ததென்று சொல்வான் என்று உரைத்தார். அதின் விலைக்கிரயமாகிய பதினேழு சேக்கலிடை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தேன். (32:6-13). பாரூக், இந்த முத்தியிடப்பட்ட உறுதியை ஒரு மண்பாத்திரத்திலிட்டு அதனை மண்ணுள் புதைத்துவைத்தான். இது எப்போதாவது ஒரு நாள் இவர்கள் மீண்டுவந்து கொள்வனவு செய்வதும், விற்பனை செய்வதும் இடம்பெறும் என்பதன் அடையாளமாகும். (32:14, 15). எரேமியா சிறையில் இருக்கும்போது கர்த்தருடைய கிருபையுள்ள வாக்குறுதியுள்ள வார்த்தைகளினால் ஆறுதல்படுத்தப்பட்டார். "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." (33:3). இந்த மெய்சிலிர்க்கும் வார்த்தைகள் 30-33 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அடங்கியிருப்பவையானது.

a. இந்தச் சிறையிருப்பில் இருக்கும் காலத்தில் கர்த்தர் எருசலேமை குணமாக்கி அவர்களை செழிக்கப்பண்ணி சமாதானம் அருளும் காலம் வருகின்றது. (33:4-6).

b. ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன் (31:3).

c. நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; (31:8). 30:3, 10, 11. "அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழிநடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான். அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழிநடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மை யான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான். அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக் குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை. " (31:9, 12).
31:15, 16, ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ

கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். மத் 2:18 எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று. இந்த வார்த்தைகள் எரோது கிறிஸ்துவைக் கொலை செய்வதற்காக பெத்தலகேமில் குழந்தைகளைக் கொலைசெய்தான் என்ற வார்த்தையுடன் தொடர்புடையது.

d. ஆயிரம் வருட அரசாட்சியில் இஸ்ரவேல் தங்களுடைய துக்கத்திற்கான காரணத்தை அறிந்து கொள்ளும்" "நீர் என்னைத் தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்; என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்; நீரே என் தேவனாகிய கர்த்தர். நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்து கொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்துவருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன். (31:18, 19).
e. நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்ததுபோல அவர்களைக் கட்டுவித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களு டைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன். நான் அவர்களுக்குச் செய்யும் நன்மை யையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ் ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளி ச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். (33:7-9; 31:38, 39; 30:18-21).
11. இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளைஎரேமியா பார்த்தார். ஒரு கூடையிலே முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்குச் சமானமான மிகவும் நல்ல அத்திப்பழங்களும், மற்றக் கூடையிலே புசிக்கத்தகாத மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது. (24:1-3). நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன். அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப் பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன். நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவதுபோல, நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிட்டு, அவர்களுக்குத் தீமையுண்டாக அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், சாபமாகவும் வைத்து, அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகுமட்டும், அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நுகம் ஒன்றைத் தயாரித்து அதனை கழுத்தில் கட்டும்படி எரேமியாவுக்கு கர்த்தர் கட்டளையிட்டார். அதன்பின்பு அவர் ஏதோம், மோவாப், அம்மோன், தீரு என்ற தேசங்களுக்கு தன்னுடைய பிரதிநிதிகள்மூலம் செய்தியை அனுப்பினார். தேசமானது பாபிலோனிடம் கொடுக்கப்படும் என்று எச்சரிக்கை அனுப்பப்பட்டது. இந்த நுகத்தை உண்மையான மனம் திரும்புதலுடன் அணிந்து கொள்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள், ஆனால் மறுப்பவர்கள் அழிக்கப்படுவார்கள். (27;8). யூதாவையும் அயல் தேசங்களையும் தண்டிப்பதற்கு நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்திய பிற்பாடு, பாபிலோனும் தண்டுக்கப்படும். (27:7). பாபிலோன் சிறையிருப்பிற்குப்பின்பு அது மீண்டும் எருசலேமிற்குக் கொண்டுவரப்படும். (27:22). என்று அழைக்கப்படுகிற பொய்த்தீர்க்கதரிசியினால் எரேமியா குற்றப்படுத்தப்பட்டார், அவர் பாபிலோனிய சிறையிருப்பு இரண்டுவருடங்களே நீடிக்கும் என்று கூறினார், ஆலயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆலயப்பணி மூட்டுக்களுடன் தானியேல், எசேக்கியா, யோகாச்சீன் ஆகியோர் திரும்பி வருவார்கள் என்று கூறினார். (28:1-4). அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போட்டான். (28:10, 11). இப்போதும் அனனியாவே, கேள்; கர்த்தர் உன்னை அனுப்பினதில்லை; நீயோ இந்த ஜனத்தைப் பொய்யை நம்பும்படிச் செய்தாய். ஆகையால், இதோ, உன்னைப் பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றிவிடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான். அப்படியே அனனியா என்கிற தீர்க்கதரிசி அவ்வருஷத்திலே தானே ஏழாம் மாதத்தில் செத்துப்போனான்.( (28:17)

12. ரேகாபியர் குடும்பம் இருந்த இடத்திற்கு எரேமியா சென்றார், இவர்கள் யோனதாப் ரேகாப்பின் குமாரன் என்பவரின் மத ஒழுங்கின்படி ஜெகூவின் ஆட்சியில் ஜீவித்து வந்தார்கள், இது கி.மு.841-814. காலப்பகுதியில் இடம்பெற்றது. இவர்கள் பாகால் வணக்கத்தை இஸ்ரவேலிலிருந்து இல்லாது ஒழிக்க உதவினார்கள், அவர்கள் நகர வாழ்க்கையை ஒழித்து, மேய்ப்பர் வாழ்க்கை வாழ்ந்தார்கள், அத்துடன் திராட்சரசம் குடியாதிருந்தார்கள். (35:2).

a. திராட்சைரசம் கொடுத்து மக்களைச் சோதிக்கும்படி எரேமியா கட்டளையிடப்பட்டார். “நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை; ஏனென்றால், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக் கட்டளையிட்டார். ” (35:6).

b. திராட்சரசம் குடியாதபடிக்கு, ரேகாபின் குமாரனாகிய யோனதாப் தன் புத்திரருக்குக் கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டுவருகிறது; அவர்கள் இந்நாள்மட்டும் அதைக் குடியாமல், தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள்; ஆனாலும் நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக்கொண்டேயிருந்தும், எனக்குக் கீழ்ப்படியாமற்போனீர்கள். நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றாமல், அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உங்கள் நடக்கையைச் சீர்திருத்துங்கள், அப்பொழுது உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்திலே குடியிருப்பீர்கள் என்று சொல்லி, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தும், நீங்கள் உங்கள் செவியைச் சாயாமலும் எனக்குக் கீழ்ப்படியாமலும்போனீர்கள். (35:12-19).

13. **ஆலயம் இடிக்கப்படும் என்று எரேமிய பிரசங்கித்தபோது, அங்குள்ள ஜனங்கள்,** இந்த ஆலயம் சீலோவைப்போலாகி, இந்த நகரம் குடியில்லாமல் பாழாய்ப்போம் என்று, நீ கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்வானேன் என்று சொல்லி, ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள். (26:6-9). அங்கிருந்த வயோதிப ஞானவான்கள் எரேமியாவுக்கு உதவி செய்தார்கள். இவருடைய பிரசங்கம் மீகாவின் பிரசங்கம் போல அமைந்தது. (மீகா3:12). எரேமியா 26:17-19.

### G. நேபுகாத்நேச்சாரின் கீழ் எரேமியா.

1. செதேக்கியா அழிந்து கொண்டிருக்கும் நகரத்திலிருந்து தப்பிப் போவதற்கு முயற்சித்தான், ஆனால் எரிக்கோவிற்கண்மையில் பிடிக்கப்பட்டு எருசலேமிற்குக் கொண்டுவரப்பட்டான் அங்கு அவர் முன்னிலையில் அவருடைய இரண்டு மகன்மாரும் கொல்லப்பட்டார்கள் அத்துடன் அவருடைய இரண்டு கண்களும் பிடுங்கப்பட்டன. (39:4-7; 52:6-11).

2. நேபுகாத்நேச்சார், எரேமியாவை அன்புடன் நடத்தும்படி தன்னுடைய அதிகாரியாகிய நேபுசராதான் என்பவருக்கு கட்டளையிட்டான். (39:11, 12).

3. எரேமியா விடுதலையாக்கப்பட்டு நேபுகாத்நேச்சாரால் ராமாவிற்குக் கொண்டு செல்ல ப்பட்டார். இங்கு அவர் எருசலேமிற்கு அல்லது பாபிலோனுக்குச் செல்லலாம் என கூறப்பட்டார். எரேமியா எருசலேமிற்குத்திரும்பி யூத ஆளுநராகிய கெதலியாவின் பாதுகாப்பின் கீழ்செல்வதற்கு விரும்பினார். (40:1-6; 39:14).

### H. கெதலியாவின்கீழ் எரேமியா

1. போருக்குப்பிந்திய நிர்வாகத்தை கெதலியா பாழாக்கப்பட்ட எருசலேம் மீது செயற்படுத்தினான். (40:7-12).

2. உம்மைக் கொன்றுபோடும்படிக்கு, அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் என்பவன், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை அனுப்பினானென்பதை நீர் அறியவில்லையோ என்றார்கள்; ஆனாலும் அகிக்காமின் குமாரனாகிய கெதலியா அவர்கள் வார்த்தையை நம்பவில்லை (40:13-16).

3. கெதலியாவை இஸ்மவேல் கொலைசெய்தான், மிஸ்பாவிலே கெதலியாவினிடத்தில் இருந்த எல்லா யூதரையும், அங்கே காணப்பட்ட யுத்தமனுஷராகிய கல்தேயரையும் இஸ்மவேல் வெட்டிப்போட்டான். (41:1-9).

4. யோகன்னான் கொலை நடந்த இடத்திற்கு வந்தான், விரைவில் அங்கு அமைதியை ஏற்படுத்தினான். (41:11-17).

### I. யோகன்னானின் கீழ் எரேமியா

1. யோகன்னான், எரேமியாவை மிகிதியாக இருக்கும் இந்த யூதர்களுக்காக கர்த்தரிடம் ஜெபம் செய்துகொள்ளும்படி வேண்டிக் கொண்டான். (42:1-5).

2. மற்றவர்கள் சிலர் திட்டமிட்டபடி எகிப்திற்குச் செல்லாமல் எருசலேமிலே தங்கி இருக்கும்படி கர்த்தர் எரேமியாவுக்கு கூறினார். (46:6-22).

3. நீ பொய் சொல்லுகிறாய்; எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல, எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை என்னு கூறி எரேமியாவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள். அவர்கள் கட்டாயமாக எகிப்திற்கு எரேமியாவையும் அழைத்துக் கொண்டு சென்றார்கள். (43:1-7).

4. யூதர்கள் எகிப்திற்கு வந்தபோது திரும்பவுமாய் அவர்கள் சுரூப வழிபாட்டிற்குள் சென்றார்கள். அவர்கள் வான ராக்கினிக்கு தூபங்களைக் காட்டத் தொடங்கினார்கள்." (44:8-10, 15-19).

5. மனம் திரும்பி எருசலேமிற்கு வரமறுத்த யாவர் மீதும் எரேமியா தெய்வீக தண்டனையான மரணத்தைக் கூறினார். (44:7-14, 28).

6. பெரிய கற்களை எடுத்துக்கொண்டு, யூதா ஜனங்களுக்கு முன்பாக அவைகளைத் தக்பானேசில் இருக்கிற பார்வோனுடைய அரண்மனையின் ஒலிமுகவாசலில் இருக்கிற சூளையின் களிமண்ணிலே புதைத்து வைத்தார். இது நேபுகாத்நேச்சார் எகிப்தைச் சிறைப்பிடித்து இந்தக் கல்லின் மேல் தன்னுடைய சிங்காசனத்தை ஸ்தாபிப்பான், பின்பு அவன் எருசலேமிற்குப் செல்ல விரும்பாத யூதர்களை கொன்றுபோடுவான், மிகுதியானவர்கள் பலவிதநோய்களாலும் மரிப்பார்கள் அல்லது அடிமைப்படுத்தப்படுவார்கள். (43:9-13).

**IV. எரேமியாவின் தீர்க்கதரிசனங்கள்.**

A. எருசலேமின் வீழ்ச்சி (1:14-16; 3; 4:5-9; 5:15-17; 6:1-6; 32:2, 3; 38:17, 18).

B. ஆலயத்தின் அழிவு (7:11-15; 26:6-9).

C. எகிப்தில் யோகாஸ் அரசனின் மரணம் (22:10-12).

D. வெறுக்கப்பட்டதும் புலம்பல் இல்லாத்துமான யோயாக்கீமின்மரணம். (36:27-30). அவர் யோயாக்கீமின் துஸ்ட அரசை அதிகமாகக் கண்டித்தார். (22:13-19). அவர் அதிக செலவுசெய்து மாளிகையைக்கட்டினான். அவர் வறுமைப்பட்டவர்களையும் ஒன்றுமறியாதவர்களையும் கொலைசெய்தான். அவன் அவா நிறைந்தவனும் பெருமை நிறைந்தவனுமாக இருந்தான். எரேமியாவின் உடன் தீர்க்கதரியாகிய உரியாவின் பயமற்ற பிரசங்கத்தால், உரியா யோயாக்கீமினால் கொலைசெய்யப்பட்டான். (26:20-23). அரசன் கொலைசெய்யப்படுவான், அவனுக்காக யாரும் புலம்பமாட்டார்கள், எருசலேமிற்கு இழுத்துக் கொண்டு போகப்படுவான், கதவுக்கு அப்பால் குப்பைக்குள் எறியப்படுவான் என்று எரேமியா முன்னுரைத்தார்.

E. யோகாச்சீன் பரம்பரையினர் அரச பரம்பரையிலிலருந்து விலக்கப்படுதல். (22:24-30).

1. யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலதுகையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்துபோடுவேன் என்று என் ஜீவ னைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும், நீ பயப்படுகிறவர்களின் கையிலும் உன்னை ஒப்புக்கொடுப்பேன்;

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் கல்தேயரின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்.(22:24, 25).

2. எரேமியா முன்னறிவித்த தொன்னூறு நாள் அற்புதமாவது.

a. நேபுகாத்நேச்சாருக்கு கொடுக்கப்பட்டது,

b. தன்னுடைய தாயாருடன் சேர்த்து தேசத்துக்கு வெளியே எறியுண்டு போவான், **22:26**

c. வெளிநாட்டில் மரணிப்பான்.

d. உடைக்கப்பட்ட பாத்திரம் போல் எறியப்படுவான். .

e. பிள்ளைகள் இல்லாதவன்போல் எண்ணப்படுவான். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப்போகிறதில்லை (22:25-29).

F. செதேக்கியா, ஆகாப் ஆகிய இரண்டு பொய்த்தீர்க்கதரிசிகளின் மரணம், செமாயா என்னும் மற்றயவருடைய தண்டனை இவர் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்தவர்களுக்கு ஊழியம் செய்தவர் (29:20-32).

G. எருசலேமின் பொய்த்தீர்க்கதரிசியாகிய அன்னியாவின் மரணம் (28:13-17).

**H. செராய்யாவின் சிறையிருப்பு .**

நேபுகாத்நேச்சாரின் கடைசி நாட்களில் செராய்யா என்னும் பெயருள்ள மனிதன் சிறைப்பிடக்கப்படுவார். இது கூறப்பட்ட ஆறுமாதங்களின் பின்பு நிறைவேறியது. (51:59.) பாபிலோனுக்கு எதிராகக் கூறப்பட்ட எரேமியாவின் தீர்க்கதரிசனமடங்கிய சுருள் செரேயாவின் கையில் கொடுக்கப்பட்டது, அதில் உள்ளவற்றை இந்தப் புஸ்தகத்தை வாசித்துத் தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிட்டு, இப்படியே பாபிலோன் முழுகிப்போகும், நான் அதின்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்கமாட்டாமல் இளைத்து விழுவார்கள் என்றார் என்று சொல்லுவாயாக என்றான் (51:60-64).

I. பாபிலோனுக்கு எதிராகக் கிளம்பும் எகிப்திய–யூதாவின் இராணுவ யுத்தம் தோல்வியில் முடியும். (37:5-10).

J. பாபிலோனினால் எகிப்து தோற்கடிக்கப்படும். (46:1-26 உலகப்பிரசித்தி பெற்ற காக்கீமிஸ் யுத்தத்தின் விபரங்கள் இதில் கூறப்பட்டுள்ளன, நேபுகாத்நேச்சாரின் கையினால் எகிப்து மிகப் பெரிய தோல்யைத் தழுவியது. (46:1-12).

K. பாபிலோன் எகிப்தைக்கைப்பற்றும். (43:9-13).

L. பாபிலோனில் யூதாவின் எழுபதுவருடச் சிறையிருப்பு. (25:11; 29:10).

M. எழுபது வருடச்சிறையிருப்பிற்குப்பிற்பாடு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புதல். (27:19-22; 30:3,10,11,18-21; 31:9,12, 38, 39; 33:3-9).

1. **சிதறடிக்கப்பட்ட எல்லாத் தேசங்களிலிமிருந்து இஸ்ரவேலர்கள் ஒன்றிணைதல்**. (3:14; 31:10; 32:37-43).

2. **கர்த்தர் தன்னுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களை தலைவர்களாக நியமித்தல்**. (3:15).

3. **பாலஸ்தீனர்கள் மீண்டும் கர்த்தருடைய மகிமையினால் நிறைதல்**. (3:16-18). (16:14, 15; 23:7).

4. **ஒரு நீதியுள்ள கிளையை எழும்மப்பண்ணுவார்** (**அவர் இரட்சகர்**) **அவர் தாவீதின் சிங்காசனத்தின் சிங்காசனத்தில் அமருவார் அவர் நீதியொடும் ஞானத்தோடும் அரசாளுவார்**, (23:5, 6; 30:21; 33:17).

5. **எருசலேம் மீண்டும் கட்டப்பட்டு களிகூரும்**. (38:18-20; 31:4, 7-9, 12-14, 23-25; 33:10-12).

N. **எழுபது வருடத்தின்பிற்பாடு பாபிலோன் தோற்கடிக்கப்படும்**. (25:12; 27:6).

**குறிப்பு**: **பாபிலோன் கர்த்தருடைய தண்டனையைப் பெற்றுக் கொள்ளும் இது எரேமியா கூறப்பட்டதுபோல** (50-52 )**இது சரித்திர நியாயத்தீர்ப்பைமட்டும் கருதவில்லை**, (தானி5), **ஆனால் எதிர்கால நியாயத்தீர்ப்பையும் கூறுகின்றது**. (வெளி18).

O. **சிதேக்கியா சிறைப்பிடிக்கப்படல்**. (21:3-7; 34:1-5; 37:17). (39:4-7; 52:6-11.)

P. **கத்தருடைய பிள்ளைகளுக்கான அன்பான உபசரிப்பு பாபிலோன் சிறையிருப்பாளருக்கு கிடைக்கும்**. (24:1-7).

| **எரேமியாவில் காணப்படும் இரண்டு பாபிலோன்கள் 50–51** |
|---|
| **சரித்திர பாபிலோன்** |
| 539 இல்.**பெர்சிய தரியுவினால் பிடிக்கப்பட்டது** |
| **எதிர்கால பாபிலோன்.** |
| உபத்திரப காலத்தில் பிதாவாகிய கர்த்தரால் அழிக்கப்படும். (வெளி. 18:18.) |
| பாபிலோனின் இறுதி அழிவிற்குப்பின்பு (வெளி18) தேசமானது ஒருபோதும் குடியமர்த்தப்படாமல் இருக்கும். (51:26). |
| இரண்டு பாபிலோன்களின் அழிவின் போது கர்த்தர் இல்லாத தேசங்கள் புலம்பும். (வெளி. 18; எரே. 50:46). |
| இஸ்ரவேலர்கள் இரண்டு பாபிலோன்களிலுமிருந்து ஓடிப்போவார்கள். (வெளி. 18:4; எரே. 51:6). |
| பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள். (வெளி. 17:1–6; எரே 51:7). |
| அவைகளின் அழிவைக்குறித்து பரலோகம் சந்தோஷப்படும். (எரே. 51:10, 48; வெளி. 18:20). |
| இரண்டு பாபிலோன்களின் அழவிற்குப்பிற்பாடு இஸ்ரவேல் கர்த்தரைத் தேடும். இது சரித்திர பூர்வமாக இடம் பெற்றது. (எஸ்றா1) இது எதிர்காலத்தில் இடம்பெறும். (சகரியா13:9). |

| எரேமியாவின் பதினெட்டு தீர்க்கதரிசனங்கள். |
|---|
| 1. எருசலேமின் வீழ்சி (1:14–16; 4:5–9; 5:15–17; 6:1–6; 32:2, 3; 38:17, 18) |
| 2. ஆலயத்தின் அழிவு (7:11–15; 26:6–9) |
| 3. முடியிறக்கப்பட்ட அரசனாகிய யோகாசின் மரணம் எகிப்தில் இடம்பெற்றது. (22:10–12) |
| 4. யோகாக்கீமின் புலம்பல் இல்லாத மரணம். (36:27–30) |
| 5. யோகாச்சீனுடைய அரச பரம்பரை நீக்கப்படல். (22:24–30) |
| 6. இரண்டு கள்ளத் தீர்க்கதரிசிகளின் மரணமும், இன்னுமொரு தீர்க்கதரிசியின் தண்டனையும்.--- இந்த மூன்றுபேரும் பாபிலோனில் கீவிக்கிறவர்கள். —(29:20–32) |
| 7. பொய்யான எருசலேம் தீர்க்கதரிசியின் மரணம். (28:13–17) |
| 8. செராயா என்ற அவரது நண்பன்பிடிக்கப்படுதலும் சிறைவைக்கப்படுதலும். (51:59) |
| 9. பாபிலோனுக்க எதிரா செயற்பட்ட எகிப்பு--- யூதாநேச நாடுகளின் தோல்வி. (37:5–10) |
| 10. காத்மீஷில் எகிப்தின் தோல்வி (46:1–12) |
| 11. எகிப்தை பாபிலோனியர்கள் கைப்பற்றுதல். (43:9–13) |
| 12. பாபிலோனில் யூதாவின் எழுபது வருட சிறையிருப்பு (25:11; 29:10) |
| 13. எழுபது வருட சிறையிருப்புக்குப்பின்பு மீண்டும் பழைய நிலைக்குவருதல். (27:19–22; 30:3, 10, 11, 18–21; 31:9, 12, 38, 39; 33:3–9) |
| 14. எழுபது வருடங்களுக்குப்பின்பு பாபிலோனின் தோல்வி. (25:12; 27:7) |
| 15. சிதேக்கிய பிடிக்கப்படல். (21:3–7; 34:1–5; 37:17) |
| 16. பாபலோனில் இருக்கும்போது கர்த்தருடைய பிள்ளைகள் அன்பாகப்பராமரிக்கப்படல். (24:1–7) |
| 17. இறுதியாக இஸ்ரவேலர்கள் மீண்டும் ஒன்றிணைதல். (30:3, 10; 31:8–12) |
| 18. இஸ்ரவேல் தேசம் இறுதியாகக் கட்டிமுடிக்கப்படல். (30:18–21; 31:38, 39; 33:7–9) |

V. **எரேமியாவின் புதிய உடன்படிக்கை .**

A. **புதிய ஏற்பாட்டின் தன்மை** (31:31-34). இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத் தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை;

அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.

1. இது முழு இஸ்ரவேல்குடும்பத்திற்கும் உரியது.

2. இது மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் போன்றதல்ல.

3. நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன், இஸ்ரவேலர்கள் தாங்களே தங்கள் ஆவிக்குரிய தன்மையைக் கெடுத்துக் கொண்டார்கள். இறையியல் கண்டறிதலைக் குறித்துக் கொள்ளுவோம். "யூதாவின் பாவம் இரும்பெழுத் தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டு, அவர்களுடைய இருதயத்தின் பலகையிலும் உங்கள் பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது. …" (எரே. 17:1புதிய உடன்படிக்கை காலத்தில் பரலோக வைத்தியராகிய தேவன் இருதய மாற்றுச் சிகிச்சையைச் செய்துமுடிப்பார்.
4. புதிய இருதயத்துடனான மக்கள் திரும்பவுமாய் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறுவார்கள். அத்துடன் கர்த்தர் அவர்கள் தேவனாக இருப்பார்.

**B. புதிய உடன்படிக்கையின் காலம்.** "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். " (31:33), ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான். " (30:7). இந்த இரண்டு சொற்பதங்களும் மகா உபத்திரப காலத்தைக் குறிக்கின்றது. இந்த புதிய உடன்படிக்கையானது மகிமையான ஆயிரம்வருட அரசாட்சியின்போது தொடங்குகின்றது.

**C. புதிய உடன்படிக்கையின் மேன்மை.** இது மாற்றீடு இல்லாதது, நிபந்தனைகளற்றது, நித்தியமான உடன்படிக்கை போன்றதாகும்.

**D. புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர்:** தாவீதின் குமாரன் மட்டுமே இந்த இணைப்பாளராகும். (33:15-18; 30:9).

**VI. எரேமியாப்புத்தகத்தில் காணப்படும் சிறப்பான பகுதிகள்.**

A. "சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்." (6:14).

B. "என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர் குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (7:11).

C. “அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை. கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?” (8:20, 22).

D. “ஜாதிகளின் ராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை. அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார். ” (10:7, 12).

E. “மரத்தை அதின் கனிகளோடுங்கூட அழித்துப்போடுவோமென்றும், அவன் ஜீவனுள்ளோருடைய தேசத்திலிராமலும், அவன் பேர் இனி நினைக்கப்படாமலும்போக அவனைச் சங்கரிப்போமென்றும், எனக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள் என்பதை அறியாதிருந்து, நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப்போல இருந்தேன். ” (11:19).

F. “எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்” (13:23).

G. “கர்த்தர் என்னை நோக்கி: மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது; இவர்கள் என் முகத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகும்படி இவர்களைத் துரத்திவிடு. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது. ” (15:1, 16).

H. “ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல், இஸ்ர வேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ” (16:14, 15).

I. “மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அந்தரவெளியில் கற்றளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான். கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான். எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.” (17:5-10).

J. “கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்: நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப்போ; அங்கே என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன் என்றார். அப்படியே நான் குயவன் வீட்டிற்குப்

போனேன்; இதோ, அவன் திரிகையினாலே வனைந்து கொண்டிருந்தான். குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும் படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். அப்பொழுது கர்த்தருடைய வசனம் எனக்கு உண்டாகி, அவர்: இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக் குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" (18:1-6).

K. "கர்த்தாவே, என்னை இணங்கப்பண்ணினீர், நான் இணங்கினேன்; நீர் என்னிலும் பலத்தவராயிருந்து, என்னை மேற்கொண்டீர்; நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன்; எல்லாரும் என்னைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன்; கொடுமையென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக் கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று. ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம்பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற்போயிற்று." (20:7-9). "கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார். நான் பிறந்த நாள் சபிக்கப்படுவதாக; என் தாயார் என்னைப் பெற்ற நாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக. உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன்." (20:13-15).

L. "பின்னையும் அவர், இந்த ஜனங்களை நோக்கி: இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (21:8). எரேமியாவின் ஆலோசனையை கேட்ட யூதர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

M. "என் வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார். " (23:29).

N. "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுது கொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (29:11-14).

O. "ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்." (30:7). அந்திக்கிறிஸ்துவின் கடைசி மூன்றரை ஆண்டை குறிக்கிறது.

P. "பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன். இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; குருடரும், சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத் தாய்ச்சிகளுங்கூட அவர்களில் இருப்பார்கள்; மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள். அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழிநடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப் பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான். ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்தமட்டும் விலகித்திரிவாய்? கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள்." (31:3, 8, 9, 15, 22).

Q. "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (32:17, 27).

R. "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ் செய்கிற லேவியரையும் வர்த்திக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (33:3, 22).

S. "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே, நீ கலங்காதே; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன்; அப்பொழுது யாக்கோபு திரும்பிவந்து, அமைதியோடும் சாங்கோபாங்கத்தோடும் இருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுவார் இல்லை." (46:27). இஸ்ரவேலர் மீண்டும் தங்களது நாட்டிற்கு திரும்ப கொண்டுவருவதை பல முறை கூறியிருக்கிறார்.

T. "ஆ கர்த்தரின் பட்டயமே, எந்தமட்டும் அமராதிருப்பாய்? உன் உறைக்குள் திரும்பிவந்து, ஓய்ந்து அமர்ந்திரு" (47:6).

| எரேமியா |
| --- |
| **அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை** |
| 1. இவர் ஒரு ஆசாரியரின் மகனாகும் (எரேமியா1:1) |
| 2. இவர் திருமணம் செய்யாமல் இருக்கும்படி கட்டளையிடப்பட்டார். (16:2) |
| 3. தான் சிறுபிள்ளையாக இருப்பதால் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் |

காண்பித்தார். (1:6)
4. பிறப்புக்கு முன்னதாகவே கர்த்தர் தெரிவு செய்துள்ளார் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டது. (1:5)
5. எருசலேமில் ஒரு நேர்மையான மனிதனை தெரிவு செய்வதற்கு முயற்சிக்கப்பட்டது. (5:1–5)
6. யூதாவைக் கர்த்தர்பக்கம் திரும்பும்படி வேண்டிக் கொள்ளப்பட்டது. (3:12–14; 26:1–7)
7. பயமின்றி யூதாவின் பாவம் அறிவிக்கப்பட்டது, அதனால் அவர் குற்றப்படுத்தப்பட்டார்.:
அவரது குடும்பத்தினால் (12:6)
அவருடைய ஊர்மக்களால். (11:21)
மதசார்பானவர்களால். (20:1–3; 26:7–9; 37:11–16)
8. யூதாவின் பாவங்கள் பட்டியல்படுத்தப்படல்.
வான ராக்கினியை ஆராதித்தார்கள். (7:18; 44:17)
பிசாசின் தெய்வங்களுக்கு தங்கள் பிள்ளைகளைப் பலியிட்டார்கள். (7:31; 9:5)
யூதாவின் தீர்க்கதரிசிகளை கொலை செய்தார்கள். (2:30)
9.எதிர்வரப்போகும் பாபிலோனிய சிறையிருப்பு பற்றிய எச்சரிப்பு
எருசலேம் முற்றுகையிடப்படும். (4:17; 6:3–5)
அவளுடைய சொந்த மரமே அவளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. (6:6)
ஆலயம் அழிக்கப்படும். (7:14)
பிணங்கள் மிருகங்களுக்கு உணவாகும். (7:32; 9:22; 12:8, 9)
எழுபது வருட சிறையிருப்பு (7:15; 25:11; 29:10)
10. சிறையிருப்பைக்குறித்த புலம்பல். (4:19–21; 8:18, 21; 9:1, 2, 10; 13:17; 14:17)
11. யோயாக்கீம் அரசனால் சுருள் எரிக்கப்படல். (36:21–23)
12. ஊழியத்தைக் கைவிடுமாறு பயமுறுத்தப்படல். (20:7–9, 14–18)
13. ஒருகுறித்தவிடயத்தை விளங்கப்படுத்துவதற்காக ஒரு வயலை வாங்கும்படி கட்டளையிடப்படல். (32:6–15)
14. நேபுகாத்நேச்சாரால் விடுவிக்கப்படல். (40:1–6; 39:14)
15. புதிதாக நியமிக்கப்பட்ட கெதலியா என்ற ஆளுநர் உதவி செய்தல். (40:6)
16. கெதலியா கொலை செய்யப்பட்ட போது யோகன்னான் புத்திகூறல். (42:1–5)
17. யோகன்னானால் எகிப்திற்கு அழைத்துச் செல்லப்படல். (43:1–7)
18. பாவத்திற்கு விரோதமாகப் பிரசங்கித்தல். (43–44)
19. பெரும்பாலும் எகிப்தில் மரித்தார்

**அவர் ஊழியம் செய்தபோது இருந்த ஆட்சியாளர்கள்.**

யோசியா யூதாவின் கர்த்தர் பயமுள்ள கடைசி அரசன்.
யோயாக்கீம் கர்த்தர் இல்லாத வேதாகமச்சுருளை எரித்த அரசன்.
யோயாக்சீன் தொன்னூறு நாள் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்பட்டவர்.
சிதேக்கியா யூதாவின் கடைசி அரசன்.
நேபுகாத்நேச்சார் பாபிலோனின் மகாவெற்றியாளன்.
கெதலியா -எருசலேம் நகருக்காக நியமிக்கப்பட்ட ஆளுநர்.
யோகன்னான் கெதலியாவை வெற்றி கொண்டவர்.

**அவர் ஊழியம் செய்த ஜனங்கள்.**

1. எதிர்வரும் சிறையிப்பு பற்றி யூதாவின் மக்களுக்கு ஊழியம் செய்தார்.
2. சிறிய தொகையினர் ஏற்கனவே சிறையிருப்பில் உள்ளார்கள்–அவர்களை உற்சாகப்படுத்தினார். (29)

**அவர் எதிராக தீர்க்கதரிசனம் உரைத்த நாடுகள்.**

**எகிப்து 46:1–27**
காத்மீஷீல் நேபுகாத் நேச்சாரால் தோற்கடிக்கப்படல்.
**பெலஸ்தியா 47:1–6**
எகிப்தியர்களால் மிதிக்ப்படல்.
**மோவாப் 48:1–47**
பாபிலோனால் வெற்றி கொள்ளப்படல்.
**அம்மோன் 49:1–6**
இஸ்ரவேலர்களுக்கு எதிராக பாவம் செய்தபடியால் அழிக்கப்படல்.
ஆயிரம்வருட அரசாட்சியில் மீண்டும் அபிவிருத்தி செய்யப்படும்.
**ஏதோம் 49:7–22**
சோதோம் கொமாராபோல் ஆகிவிடும்.
**தமஸ்கு 49:23–27**
ஒரே நாளில் அழிக்கப்படும்
**கோதார்**, **கோத்சோர் 49:28–35**
நேபுகாத்நேச்சாரினால் அழிக்கப்படும்.
**ஏலாம் 49:34–39**
நேபுகாத்நேச்சாரால் மிதிக்கப்படும்.
ஆயிரம்வருட அரசாட்சியில் மீண்டும் அபிவிருத்தி செய்யப்படும்.
**பாபிலோன் 50:1—51:64**
இந்த தீர்க்கதரிசனங்கள் இரண்டு பாபிலோன்கள் பற்றியது.

நன்றி

கர்த்தாவே

திராணி

உசாத்துணை நூல்கள்.

**WILLMINGTON’S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS**, **INC**. **Wheaton**, **Illinois**

**HOLMAN**
**BIBLE**
**HANDBOOK** *General Editor* **David S. Dockery** *Editorial Team* **Trent C. Butler**
**Christopher L. Church**
**Linda L. Scott**
**Marsha A. Ellis Smith**
**James Emery White HOLMAN BIBLE PUBLISHERS Nashville, Tennessee**

McGee, J. V. 1997, c1981. *Thru the Bible commentary*. Based on the Thru the Bible radio program. (electronic ed.) . Thomas Nelson: NashvilleWilkinson, B., & Boa, K. 1983. *Talk thru the Bible*. T. Nelson: Nashville